**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**EA.No.4/2026**
**EP.No.160/2024**
திருமதி.செல்வி (P.W –1) **10.03.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்/DH தரப்பில் குறுக்கு விசாரணை:**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. கதவு எண் 32 சூரம்பட்டி என்.ஜி.ஓ காலனியில் சொத்து என்னுடையதா என்றால் ஆமாம். கதவு என் 32 இல் என்னுடைய மகள் மற்றும் அவருடைய வாரிசுகள் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். மனுவில் நான் சொல்லப்பட்டுள்ள என்னுடைய விலாசம் கதவு எண் 34 என்றால் சரி. தாவா சொத்தை பொறுத்து என்னுடைய மகள் ஒரு வழக்கு 2021ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் என்னுடைய பேத்திக்கு 14 வயது என்று குறிப்பிட்டு என்னுடைய மகள் அந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரி. ஆகையால் இன்றைய தேதியில் என்னுடைய பேத்தி இளவரில்லை அடைந்து விட்டார் என்றால் சரி. ஆகையால் அவரை இளவரென்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

2. என்னுடைய மகள் தாவாவை தாக்கல் செய்த சமயத்தில் என்னுடைய பேரன் பேத்தி என்னுடன் இருந்தார்கள் என்றால் ஆமாம். அந்த சூழ்நிலையில் என்னுடைய மகளுக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் தான் பேரன் பேத்தியுடன் என்னுடன் வசித்து வந்தார் என்றால் ஆமாம். அப்போது என்னுடைய மகள் தாக்கல் செய்த வழக்கில் நிலவர்களுக்கு அவர் இயற்கை பாதுகாவலராக இருந்து வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி.

3. இந்த மனுவில் இளவருக்கு நான் அடுத்த சினேகிதராக இருப்பதற்காக உரிய நீதிமன்றத்தில் அனுமதி பெறப்படவில்லை என்றால் சரி. அதற்குரிய மனு தாக்கல் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது. நான் தாக்கல் செய்த மனுவில் இளவர்களுக்கு அடுத்த சினேகிதராக இருப்பதற்காக அவருடைய தந்தை வழி தாயாரை சகோதரர்களை சேர்க்கவில்லை என்றால் சரி. என்னுடைய மகள் தாக்கல் செய்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால் ஆமாம். நிறைவேற்ற மனுதாரர் முறையாகப் பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் தொகையை வசூல் செய்வதை தாமதப்படுத்த வேண்டி வேண்டுமென்றே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே இளவர்களின் நலனுக்காக மனு தாக்கல் செய்வதாக இருந்தால் ஏற்கனவே என்னுடைய மகள் தாக்கல் செய்த வழக்கிலே நான் பாதுகாவலராக இருக்க அனுமதி கோரி இருப்பேன் என்றால் தவறு. மனு நிலைக்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2026.03.10 17:36:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.